களும் வழங்கப்படவேண்டும் என்ற கருத்தை இந்த அரசு மையமாகக் கொண்டு பல்வேறு திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்திக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடுமியான் மலையிலுள்ள அண்ணா பண்ணை கண்டுபிடிக்கப்படும் உயர் விளைச்சல் ரகங்களான விதைகள், பதியக் கன்றுகள், நெல், எண்ணெய் வித்துக்கள் போன்றவை விவசாயிகள் பயன்பெறும் வகையில் வாகனங்கள் மூலமாக விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கும் வகையில் கிராமந்தோறும் சென்று விற்பனை செய்யப்படுமா? அப்படி இல்லாவிட்டால் தாலுக்காக்களின் தலைநகரங்களில் கிடைக்கும் வகையிலாவது அவைகள் விற்பனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான் மலையிலுள்ள பண்ணை புதிய விதைகள் கண்டுபிடிக்கக்கூடிய ஆராய்ச்சி மையமாக இல்லை. வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஆராய்ச்சி மையங்கள் கண்டுபிடித்த புதிய ரகங்களைப் பெருக்குகின்ற விதைப் பண்ணையாகத்தான் அது செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. எனவே, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள, அனைத்து ஒன்றியங்களிலுள்ள வேளாண்மை மையங்களில் அனைத்து விதைகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 333.—டாக்டர் மு. சினியம்மாள். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

333—

புதுப்பாளையத்தில் வீட்டுவசதி வாரியத்தின்மூலம் வீடுகள்.

*4258—டாக்டர் மு. சினியம்மாள்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவினாசி ஒன்றியம் புதுப்பாளையத்தில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடு கட்டும் திட்டம் அரசின் செயறகுறிப்பில் உள்ளதா ?

1992 மார்ச் 24]

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

டாக்டர் மு. சினியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசித்தவர் முகம் பார்த்து பசி நீக்கும் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே, அவினாசி தொகுதியிலே 33 பஞ்சாயத்துக்கள் அடங்கியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுமார் 2.50 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவினாசியும், அவினாசி அருகிலுள்ள திருப்பூர் நகரமும் தொழில் நகரங்களாக இருப்பதால் வெளி மாவட்டங்களிலிருந்து வேலை தேடி வருகின்ற மக்கள் மிகவும் அதிகமாக இருக்கிறார்கள். வீடில்லாத உள்ளூர் மக்களும் வீட்டு வாடகை உயர்த்தப்பட்டு சமீபத்தில் வீடு கிடைக்காத நிலையும் உள்ளதால் மக்கள் வீடின்றி தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. மிகவும் பின்தங்கிய பகுதியான அவினாசியில், புதுப்பாளையத்தில் வீடில்லாத மக்களுக்கு வீடுகட்டித் தரும்பொருட்டு 1987-ஆம் ஆண்டு சுமார் 27 ஏக்கரா நிலத்தை அரசு எடுத்து, வீடு கட்டித் தரும் திட்டம் தீட்டப்பட்டதாக அறிய வருகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் விரோத ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட நமது டாக்டர் புரட்சித் தலைவியின் மக்களுக்கு வீடுகட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி ஒன்றியம் புதுப்பாளையத்தில் தற்போது வீடு கட்டும் திட்டம் இல்லை என்று தான் அறிவித்து இருந்தோம். இருந்தபோதிலும் அவினாசி வட்டம் செய்யூர் கிராமப் பகுதியில் ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலப்பரப்பை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு 20 வீடுகள் 9 இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. அரசு இதுபற்றிச் சிந்தித்து, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் இரண்டாவது கட்டமாக அவினாசியில் வீடு கட்டும் திட்டத்தைப் பரிசீலனையில் எடுத்துக்கொண்டு பொதுமக்களிடமிருந்து போதுமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுமாயின் அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் என்று அறிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பாளயத்தில் சுமார் 40 ஏக்கர் அளவிற்குப் புறம்போக்கு நிலம் இருக்கிறது. 1987 ஆம் ஆண்டு நமது டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சியில் எடுக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் விரோத ஆட்சியில், வீடு கட்டிக் கொடுக்கப்படாமல் விடுபட்டுவிட்டது. இன்றைக்குத் தமிழக முதல்வரைத் தெய்வமாக வணங்கிக் கொண்டிருக்கிற, 4 முறையும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றி பெறச் செய்த அந்த ஏழை மக்களுக்கு, அந்தப் புறம்போக்கு நிலத்தை எடுத்து, வரும் நிதி ஆண்டிலாவது அவர்களுக்கு வீடு கிடைத்திட நமது மாண்புமிகு புரட்சித் தலைவியின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 334.—திரு. ப. கலியபெருமாள். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்,

334—

சத்துணவு மையம் இல்லாத ஊர்களுக்கு சத்துணவு மையம் அமைத்தல்

*4970 — திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பல ஊராட்சிகளில் தொலை தூரத்துப் பகுதியிலுள்ள குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில் சத்துணவு மையம் இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) சத்துணவு மையம் இல்லாத ஊர்களுக்கு அதை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ; சத்துணவு மையம் இல்லாத எல்லா இடங்களிலும் தமிழ்நாடு ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் படிப்படியாக மையங்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தச் சத்துணவுத் திட்டம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் சீராகவும் செம்மையாகவும்